**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029482

1. District : மாவட்டம் அரியலூர் | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 03/17 | Date: நாள் 23.10.17

2. (i) Act சட்டம்: — | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 | Sections பிரிவுகள்: பிரிவு Sec 7 of PC Act 1988
   (iii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19.10.17 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 17.00 மணி | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.10.17 | Time : நேரம் 13.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் F.I.R. பதிவு செய்த நேரம்: 23.10.17 / 09.30 | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்மொழியாக எழுத்துமூலம் (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40 km - வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், வாலிகண்டபுரம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. மைக்கேல் ராஜ் | (b) Father's/-Husband's Name தந்தை / கணவர் பெயர் K. A. [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1990 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் டிரைவர் | (g) Address : முகவரி [illegible], பெரம்பலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பாண்டிய செல்வன் - சார்பதிவாளர் - சார்பதிவாளர் அலுவலகம் வாலிகண்டபுரம், பெரம்பலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

GCP 240-34(Type 2) 90,000 Cps -21.3.16 (HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>கனம் பெரம்பலூர் முதன்மை குற்றவியல் நீதிபதி / ஊழல் தடுப்பு சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது,</u>

இன்று **20.10.2017** காலை 13.00 மணிக்கு ஆய்வாளராகிய நான், அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது, பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், லெப்பைகுடிகாட்டில் வசிக்கும் திரு. அப்துல் ரஷிது மகன் திரு.மன்சூர்அலி என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அந்த மனுவை மின்னஞ்சல் மூலம் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனரகத்திற்கு அனுப்பி, அந்த புகார் குறித்து முதற்கட்ட விசாரணை செய்ய அனுமதி பெற்று புகார் மனுவில் கூறப்பட்டுள்ள வாலிகண்டபுரம் சார்பதிவு அலுவலகத்தில் சார்பதிவாளரராக பணிபுரியும் திரு.பாண்டியசெல்வன் மற்றும் புகார்மனுதாரர் திரு.அ.மன்சூர்அலி ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி முதற்கட்ட விசாரணை செய்ததில் புகார்மனுவில் கூறப்பட்டிருந்தபடி, புகார் மனுதாரரிடம் எதிரி திரு.பாண்டியசெல்வன் கையூட்டாக பணம் கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பது தெரியவந்தது. ஆகையால் புகார்மனுவின் பேரில் வழக்குப் பதிவு செய்ய, காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தென் சரகம்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case (தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது) and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/10/17

23/10/17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.17

Name: பெயர் ..............
Rank: நிலை .............. No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

சென்னை அவர்களின் அனுமதி பெற்று, இன்று **23.10.2017** காலை **09.30** மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2017 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988ன்படி வழக்குப் பதிவு செய்தேன். மனுதாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் A.மன்சூர் அலி S/O K.A. அப்துல் ரஷிது, லெப்பைக்குடிகாடு, குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, அரியலூர். ஐயா, நான் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், லெப்பைக்குடிகாட்டில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் B.E. படிப்பை இறுதி வரை முடிக்காமல் பாதியில் நிறுத்திவிட்டு தற்சமயம் டிரைவர் வேலை செய்து வருகிறேன். எனக்கும், எங்கள் ஊரைச்சேர்ந்த ஹூசேன்ஷா மகள் சபினாபானுக்கும் கடந்த 23.07.2017ம் தேதி லெப்பைக்குடிகாடு, கிழக்கு ஜும்ஆ பள்ளி திருமணமஹாலில் நிக்காஹ் (எ) திருமணம் நடந்தது. நான் வெளிநாடு செல்ல இருப்பதால் எங்களது நிக்காஹ் (எ) திருமணத்தை பதிவு செய்து திருமணசான்று பெறுவதற்காக 19.10.2017ன் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்துக்கு சென்று சார்பதிவாளர் திரு. பாண்டியசெல்வன் அவர்களை சந்தித்து எங்களது நிக்காஹ் (எ) திருமணத்தை பதிவு செய்து மொத்தம் 5 காப்பி வேண்டும் என்று சொல்லி விபரம் கேட்டேன் அதற்கு அவர் எங்கள் இருவருடைய ஆதார் அட்டை, டி.சி., நிக்காஹ் பத்திரிக்கை, குடும்ப அட்டை, பள்ளி வாசலில் பதிவுசெய்தசான்று மற்றும் வி.ஏ.ஓ சான்று ஆகியவற்றுடன் மூன்று சாட்சிகளை அழைத்துக்கொண்டு ரூ.1500/– பணத்துடன் வரவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் ரூ.1500 பணம் கட்டவேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் கட்டணம் ரூ.200தான் நீ எனக்கு தனியா ரூ1300 சேர்த்து மொத்தம் ரூ.1500 தர வேண்டும் என்று சொன்னார். நான் டிரைவராக வேலைபார்க்கிறேன் கொஞ்சம் கொறைச்சு சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ. 1500/–யே குறைவாகத்தான் சொல்லியிருக்கிறேன் இதற்கு மேல் குறைக்க முடியாது என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்றாலும் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இது சம்மந்தமாக என் மனைவியுடன் ஆலோசித்து லஞ்சம் கொடுக்க வேண்டாம் என்றும், லஞ்ச ஒழிப்பு போலிசில் புகார் கொடுக்கலாம் என்றும் முடிவு செய்து பெரம்பலூரில் உள்ள கம்ப்யூட்டர் சென்டரில் சொல்லி மனு தயார் செய்து இன்று 20.10.2017–ம் தேதி தங்களிடம் நேரில் வந்து மனுவை கொடுக்கிறேன். எங்களுடைய திருமணத்தை பதிவு செய்து சான்று வழங்க என்னிடம் ரூ.1,300 லஞ்சமாக கேட்ட வாலிகண்டபுரம் சார்பதிவாளர் திரு.பாண்டியசெல்வன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு, **(sd)** மன்சூர்அலி **20.10.17.** **<u>Submitted to the Court of the Honourable Chief Judicial Magistrate Cum Special Judge, Perambalur District.</u> Received**

**this report at 13.00 hrs on 20.10.2017. Made preliminary enquiry. Registered a case in Ariyalur, V&AC, Cr.No.02/2017 U/s 7 of the P.C. Act-1988 at 09.30 hrs on 23.10.2017. (Sd) V.Sasikala, 23.10.2017 Inspector of Police, V&AC, Ariyalur.**

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார்மனு கனம் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிபதி/ முதன்மை குற்றவியல் நீதமன்ற நடுவர் மற்றும் ஊழல் தடுப்புச் சட்ட வழக்கு சிறப்பு நீதிபதி, பெரம்பலூர், அவர்களின் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக கோப்பில் வைக்கப்பட்டது.

23/10/17

Ariyalur.